## III. மகாவங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்

1964ம் ஆண்டிற்கான மகாவங்கியின் நிதிக்கணக்குகள், பின்னிணைப்பு IIல் உள்ள அட்டவணை 6ல் கொடுக்கப்பட்டுள்ளன.

| | மாற்றம் | |
|---|---|---|
| | பத்து இலட்சம் ரூபாய்களில் | சதவீதம் |
| மொத்தக் கேள்விப் பொறுப்புகள் .. .. | + 78·4 | + 6·4 |
| சுற்றோட்டத்திலுள்ள நாணயங்கள் .. .. | + 31·3 | + 3·5 |
| கேள்வி வைப்புக்கள் .. .. | + 47·1 | + 14·5 |
| (இதில் வர்த்தக வங்கிகள்) .. .. | + 39·3 | + 36·2 |
| சர்வதேச ஒதுக்கு நிதி .. .. | + 21·7 | + 19·0 |
| உள்நாட்டு இருப்புச் சொத்துக்கள் .. .. | +111·1 | + 8·8 |
| அரசாங்கப் பிணைகளும், உத்தரவாதப் பிணைகளும் .. | +123·2 | + 12·0 |

\+ ஏற்றம்

மகாவங்கியின் ஐக்கிய அமெரிக்க டொலர் மாற்றுவீதம், வங்கியின் ஸ்டேர்லிங்–டொலர் வீத மாற்றங்களுக்கு ஏற்ப காலத்திற்குக் காலம் (பின்னிணைப்பு I (இ)ற்தரப்படி) மாற்றப்பட்டது.

மகாவங்கியின் ஸ்டேர்லிங், இந்திய ரூபாய் மாற்று வீதங்களில் இவ்வருடம் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லை. இவ்வீதங்களாவன:—

| | தந்தி மாற்றுக் கொள்வனவு | தந்தி மாற்று விற்பனவு |
|---|---|---|
| ஸ்டேர்லிங் (இலங்கை ரூபாய்க்கு) உடனடி | 1சி. 6 3/64 பெ. உடனடிக்கு எதிராக | 1சி. 61/32 பெ. உடனடிக்கு எதிராக |
| எதிர்கால (ஆறு மாதங்கள் வரை) | 1/128 பெ. மாதாந்த கழிவு | 1/128 பெ. மாதாந்த அதிக விலை |
| இந்திய ரூபாய்கள் (100க்கு) உடனடி | ரூ. 99 3/4 உடனடிக்கு எதிராக | ரூ 99 13/16 உடனடிக்கு எதிராக |
| எதிர்கால (ஆறு மாதங்கள் வரை) | ரூபாயில் 1/32 மாதாந்த கழிவு. | ரூபாயில் 1/32 மாதாந்த அதிக விலை. |

மகா வங்கியின் அந்நிய செலாவணிகளது கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய விபரங்கள், பின்னிணைப்பு IIல் உள்ள அட்டவணை 11ற் காட்டப்பட்டிருக்கின்றன.

அரசாங்கப் பிணைகளுக்கும், வாக்குறுதிப் பத்திரப்பாவிப்பிற்கும் எதிராகக் கொடுக்கப்பட்ட முற்பணங்களுக்கான (இவை சில குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களினுல் எழுந்தவை) மகா வங்கியின் வட்டி வீதங்கள் வருடத்திற்கு 4 சதவீதமாக மாற்றமின்றி இருந்தன.

கூட்டுறவுச் சங்கங்களின் வாக்குறுதிப் பத்திரப்பாவிப்பிற்கு (இது உள்நாட்டில் விளைந்த விவசாயப் பொருட்களின் கொள்வனவு, விற்பனவு அல்லது களஞ்சியத் திடுகையினுல் ஏற்பட்டது.) எதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் மீதான மகா வங்கியின் வட்டிவீதத்திலும் மாற்றமிருக்கவில்லை. இவ்வட்டி வீதம் வருடத்திறகு 3 சதவீதமாக இருந்தது. இறைசேரி உண்டியல்களுக்கான மகா வங்கியில் கழிவு வீதம் கடைசியாக அங்கீகரிக்கப்பட்ட சராசரிக் கேள்வி வீதப்படி தொடர்ந்தும் வருடத்திற்கு 1·8 சதவீதமாக நிலைத்திருந்தது. கைத்தொழில், விவசாயம், வர்த்தகம் அல்லது வியாபாரம் ஆகியனவற்றின் வளர்ச்சி அல்லது அபிவிருத்திக்காகக் கொடுகடன் தாபனங்களுக்கு மகாவங்கியால் வழங்கப்படும் திருப்பி நிதியீட்டுதல் நிதிக்கான கடன்களின் பேரிலுள்ள வட்டி வீதம், வருடத்திற்கு 5 சதவீதமாக்கப்பட்டது.

**நாணய வெளியீடு:**

புதியவன்ன அமைப்புடன் கூடிய ரூபா 100/-, ரூபா 10/- ஆகிய இனத்தைச் சேர்ந்த நாணயத்தாள்கள், 1964ம் ஆண்டில் வெளியிப்பட்டன. ரூபா. 100/- இனத்து நாணயத்தாள் பங்குனி மாதத்திலும், ரூபா 10/- இனத்து நாணயத்தால் ஐப்பசி மாதத்திலும், வெளியிடப்பட்டன.

1963ம் ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய வன்ன அமைப்புடன் கூடிய ரூபா 5/- ரூபா 2/-, ஆகிய இனத்தைச் சேர்ந்த நாணயத்தாள்களைப் போலவே, புதிய ரூபா 100/-, ரூபா 10/- ஆகிய நாணயத்தாள்களும் அவற்றின் முற்பக்கத்திலே, வலது கைப்பக்கத்தில் காலஞ் சென்ற பிரதமர் கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டார நாயக்காவின் படத்தையும், இடது கைப்பக்கத்தில் பேரவைச் சிங்கத்தின் நீர்ப் பொறியையும் கொண்டுள்ளன. ஒவ்வொரு இனத்திலும், புதிய நாணயத்தாள்கள் முன்பு வெளியிடப்பட்ட நாணயத்தாள்களின் அமைப்பைவிடச் சிறியவையாக உள்ளன. இப்புதிய நாணயத்தாள்களினுள்ளே உலோகத்தினுற் செய்த நூலொன்று நிலைக்குத்தாக அடக்கப்பட்டிருக்கின்றது.

ரூபா 100/- நாணயத்தாலின் பிற்பக்கத்தில் சிகிரியா ஓவியத்தின் பிரதிபலிப் பொன்று காணப்படுகின்றது. அதன் மேற்கரை மத்தியிலும், கீட்கரை மத்தியிலும் பிரதான அச்சுக்கிடையே நுண்ணிய எழுத்துக்கள் நிரம்பியிருக்கின்றன. ரூபா 10/- நாணயத்தாலின் பிற்பக்கம், புரதான சிங்கள வன்ன வேலைப்பாடுகளமைந்த இரு தூண்களுக்கிடையே, மத்திய பகுதியில், அநுராதபுரத்துத் துவார பாலகர் கற்சிலையின் பிரதிபலிப்பைக் கொண்டுள்ளது. அத்துடன் இதன் இருபக்க மத்தியும் நுண்ணிய எழுத்துக்களால் நிரம்பப் பெற்றுள்ளது.

''குப்ரோ-நிக்கலி''லான புதிய ரூபா 1/- நாணயக்குத்தியும், 1964ம் ஆண்டு பங்குனி மாதத்தில் வெளியிடப்பட்டது. 1963ம் ஆண்டில் வெளியிடப்பட்ட புதிய அமைப்புள்ள துணை நாணயங்களைப் போலவே, புதிய ரூபா 1/- நாணயக் குத்தியும் அதன் முற்பக்கத்தில் இலங்கைப்படைக்கலச் சின்னத்தைக் கொண்டுள்ளது. இப் புதிய நாணயக்குத்தி அதன் பிற்பக்க மத்தியிலே அன்னசிப்பூ உருவை உபயோகித்து மரபு தொட்டு வந்த ஓர் சிங்கள வன்ன வேலைப்பாட்டைக் கொண்டுள்ளது. அத்துடன் அது, சிங்கள ஓவியக்கலையில் உள்ள ''லியவெல'' நோக்குருவிலிருந்து பெற்ற வன்ன வேலைப்பாடுகளுக்கிடையே நாணயக்குத்தியின் பெருமானத்தை, சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய எழுத்துக்களில் தாங்கப் பெற்றுள்ளது.

**வருமானமும் செலவும்:**

இவ்வருடத்தில் மகாவங்கியின் வருமானம் ரூபா 300,64,844.05 சதமாகும். இதே வருடத்தில் உள்ள செலவுகள், நாணய விதி அதிகாரச்சட்டத்தின் 38ம் பிரிவி லுள்ளபடி நியமிக்கப்பட்ட, ரூபா 112,62,176.79 சதம் கொண்ட ஒதுக்கு நிதியும் உட்பட ரூபா 290,64,844.05 சதமாக விளங்கின. 1964ம் ஆண்டு, மார்கழி மாத முடிவில் உள்ளபடியான வங்கியின் மொத்த மூலதனக் கணக்குகள், வங்கியின் மொத்த இருப்புச் சொத்துக்களுக்கும், அந்நிய நாணயங்களாக உள்ள இருப்புச் சொத்துக் களுக்கும் இடையேயுள்ள வேற்றுமையில் 15 சதவீதத்திற்குக் குறைவாக இருந்தமையால், வங்கியின் நிகர இலாபமான ரூபா 10/-இலட்சமும், நாணயவிதி அதிகாரச்சட்டத்தின் 39 (ஆ) பிரிவின்படி மூலதன மிகையில் வரவு வைக்கப்பட்டது. தற்போதுள்ள மூலதன மிகையின் தொகை 530 இலட்சம் ரூபாய்களாகும்.

**வங்கி மேற்பார்வைப் பகுதி:**

1964ம் ஆண்டில் வங்கி மேற்பார்வைப் பகுதி, நாணய விதி அதிகாரச் சட்டத்தின் 29 (1) பிரிவின்படி 8 வர்த்தக வங்கிகளைப் பரிசோதனை செய்தது. அச் சட்டத்தின் 29 (2) பிரிவின்படி நாணயச் சபையின் கட்டளைக்கு இணங்க, இப்பகுதி, வர்த்தக வங்கிகள் அல்லாத ஒரு வங்கித்தாபனத்தையும் பரிசோதனை செய்தது.

மேலும் இப்பகுதி, 1957ம் ஆண்டின் 42ம் இலக்க ''வங்கிப்பற்றுகள் வரிச்சட்டத்தை'' நடைமுறைக்குக் கொண்டுவருவது சம்பந்தமாகவும், வங்கிகளிற் கணக்குகள் திறப்பதோடு தொடர்புள்ள, 1961ம் ஆண்டின் 65ம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் IIIம் பகுதியைத் தொழிற்படுத்துதல் சம்பந்தமாகவும் உள்ள அதன் பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வந்தது.

மேலே கூறப்பட்ட வங்கிப் பரிசோதனைகளுக்குக் கூடுதலாக, இப்பகுதி, சட்டங்கள் அல்லது ஒழுங்குகளில் எவையேனும் மீறப்பட்டுள்ளனவா, அல்லவா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்வதன் பொருட்டு, அவசியம் நேரிட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம், வங்கிகளில் கணக்கேடுகளையும் நுனித்தாய்ப் பார்வையிட்டது.